# பத்திரிக்கைச் செய்தி

## சொத்து வரி பெயர் மாற்றம் செய்து தர லஞ்சம் கேட்ட வரி வசூலிப்பவருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டணை மற்றும் அபராதம் ரூ.40,000/- விதித்து தீர்ப்பு

சென்னை, கே.கே நகர், கிழக்கு வன்னியர் தெரு, எண்.107/9, சாகர் பிளாட்டில் வசிக்கும் திரு.எஸ்.சரவணன் த/பெ.சுந்தரம் என்பவர் கே.கே.நகர் V.V.V. கன்ஸ்டெக்ஷனில் சூப்பர்வைசராக பணிபுரிபவர், சென்னை, இராமாபுரம் அம்பாள் நகர், பாரதியார் தெருவில் எண்.1/7 என்ற வீட்டினை திரு.சொக்கலிங்கம், த/பெ. காளத்தியப்பன் என்பவரிடமிருந்து கடந்த 13.02.2012-ந்தேதி கிரயமாக பெற்று அங்கு புதிய வீட்டினை கட்டினார். அந்த வீட்டின் சொத்து வரியின் பெயரை திரு.சரவணன் தனது பெயருக்கு மாற்றுவதற்கு அவரது நண்பர் திரு.பழனி மூலமாக கடந்த 16.04.2013-ம் தேதி அன்று மனு கொடுத்து அவரது நண்பர் திரு.பழனி என்பவர் சென்னை ராமாபுரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று வரி வசூலிக்கும் எதிரி திரு.விஜயரங்கன் அவர்களை சந்தித்தார். அப்பொழுது எதிரி உரிமையாளரான திரு.சரவணன் அவர்களின் பெயருக்கு வரி மாற்றம் செய்வதற்கு ரூ.220/- டிடி அல்லது காசோலையாகவோ மற்றும் ரூ.3000/- அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும் மேற்படி வீட்டின் உரிமையாளர் திரு.சரவணன் அவர்களை அழைத்துக் கொண்டு லஞ்சப்பணத்துடன் 18.04.2013-ம் தேதி தனது அலுவலகத்தில் வந்து சந்திக்குமாறு தெரிவித்துள்ளார். அதன்படி புகார்தாரர் திரு.சரவணன் மற்றும் அவரது நண்பர் திரு.பழனி 18.04.2013-ம் தேதி எதிரியை சந்தித்த போது எதிரி லஞ்சப்பணம் கேட்டப்பொழுது மனுதாரர் லஞ்சப்பணம் கொண்டு வரவில்லை என்று தெரிவித்துள்ளார். பின்னர் எதிரி திரு.விஜயரங்கன் புகார்தாரர் திரு.சரவணன் அவர்களை மறுநாள் 19.04.2013-ம் தேதி லஞ்சப்பணத்துடன் வந்து சந்திக்கும்படி அனுப்பி வைத்துள்ளார். மேற்படி புகார்தாரர் திரு.சரவணனுக்கு எதிரிக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் சென்னை நகர பிரிவு-II லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்திற்கு வந்து எதிரியின் மீது புகார் மனு 19.04.2013-ம் தேதி கொடுத்து. அதன் பேரில் எதிரி திரு.விஜயரங்கன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரி, புகார்தாரர் திரு.சரவணனிடம் லஞ்சப்பணம் ரூ.3000/- அவரது அலுவலகத்தில் கேட்டுப் பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டு கைது செய்யப்பட்டார். பின்னர் எதிரி விஜயரங்கன் அவர்கள் லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக திருவள்ளூர் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றது. இவ்வழக்கில் வீட்டு வரி பெயர் மாற்றம் செய்வதற்கு புகார்தாரரிடம் எதிரி திரு.விஜயரங்கன், முன்னாள் வரி வசூலிப்பவர், சென்னை இராமாபுரம் மாநகராட்சி அலுவலகம், தற்போது வளசரவாக்கம் அவர்கள் லஞ்சப்பணம் ரூ.3000/- கேட்டுப் பெற்றது குற்றம் நிருபணமானதால் திருவள்ளூர் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்றத்தில் இன்று 26.10.2022-ம் தேதி எதிரிக்கு 3 வருடம் கடுங்காவல் தண்டனையும், ரூ.40,000/- அபராதமும் தண்டனையாக விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.